Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar – MBBS MS DNB MCH (vascular) – Sr Vascular Surgeon – 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari – MS (Opthal) DO MBA – Sr Eye Surgeon – 9444 288784
Dr Sathish Rajkumar – MBBS MS FMAS – Laparoscopic & Laser Surgeon – 9445 401793
Dr Shanthi R – MBBS MS MCH (vascular) – Sr Vascular Surgeon – 9884 650945
Dr Salins R – MBBS MD – General Physician – 87780 87742
Dr Praveena E – MBBS MS (ENT) – Sr ENT Surgeon – 9944 100443

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் | சென்னை, 1 நவம்பர் 2026 | ரூ.2/- | இதழ் - 112

சர்தார் வல்லபாய் படேலின் ஒற்றுமை, ஒழுக்கம், நாட்டைக் கட்டமைப்பது குறித்த கொள்கைகளிலிருந்து இளைஞர்கள் உத்வேகம் பெற வேண்டும்: குடியரசு துணைத் தலைவர் அழைப்பு

சென்னை – 1 நவம்பர், 2026 சர்தார் வல்லபாய் படேலின் ஒற்றுமை, ஒழுக்கம், நாட்டைக் கட்டமைப்பது குறித்த கொள்கைகளிலிருந்து இளைஞர்கள் உத்வேகம் பெற வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

சர்தார் வல்லபாய் படேலின் 151-வது பிறந்த தினத்தையொட்டி, 'தேசிய ஒற்றுமை தினம்' கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, குடியரசு துணைத் தலைவர் மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சர்தார் கதை' நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய ஒற்றுமை தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்ட அவர், சர்தார் படேலின் வாழ்க்கை, இந்தியாவின் மிகச்சிறந்த தலைவர்களில் ஒருவரின் வரலாறு மட்டுமின்றி, அது இந்தியாவின் ஒற்றுமை, துணிச்சல், நாட்டைக் கட்டமைத்த வரலாறும் அடங்கியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பில் சர்தார் படேல் ஆற்றிய மகத்தான பங்களிப்பை நினைவு கூர்ந்த குடியரசு துணைத் தலைவர், நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் மிகப்பெரிய சவால்களை எதிர்கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்டினார்.

பிரிவினையால் ஏற்பட்ட நிச்சயமற்ற சூழல், 550-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்க வேண்டிய அவசியம் என பல்வேறு சவால்கள் இருந்தன. தனது உறுதியான மன உறுதி, சமாதானப்படுத்தும் திறன், நிர்வாகத் திறன், ராஜதந்திரம் ஆகியவற்றின் மூலம், சர்தார் படேல் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணியை வெற்றிகரமாக முடித்து, ஒருங்கிணைந்த இந்தியா என்ற கனவை நனவாக்கினார். அவரது இந்த அசாதாரண பங்களிப்பிற்காக நாடு என்றென்றும் அவருக்கு நன்றியுடன் இருக்கும் என்று அவர் கூறினார்.

நாட்டிற்காக விமானப்படையில் 42 ஆண்டுகள் சிறப்பான சேவையாற்றிய ஏர் சீஃப் மார்ஷல் ஏ பி சிங் பணி ஓய்வு பெறுகிறார்

சென்னை – 1 நவம்பர், 2026 இந்திய விமானப்படைத் தளபதி ஏர் சீஃப் மார்ஷல் ஏ பி சிங், இன்று (2026 அக்டோபர் 31) பணி ஓய்வு பெறுகிறார். இதன் மூலம், நாட்டிற்கு 42 ஆண்டுகள் மிகச் சிறந்த சேவையாற்றிய அவரது புகழ்பெற்ற பணி வாழ்க்கை நிறைவடைகிறது.

திறமையான போர் விமானியாகவும், சோதனை விமானியாகவும் பணியாற்றிய அவர், இந்திய விமானப்படையின் செயல்பாட்டுத் திறன், போர் புரிவதற்கான தயார்நிலை, நவீனமயமாக்கல் ஆகியவற்றில் முக்கிய பங்களிப்புகளை வழங்கியுள்ளார்.

விமானப்படைத் தளபதியாக அவர் பணியாற்றிய காலத்தில், உறுதியான தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியதுடன, செயல்பாட்டுத் தயார்நிலைக்கு உயர் முன்னுரிமை வழங்கினார். குறிப்பாக, 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் போது, இந்திய விமானப்படை, தனது போர்த் திறன், துல்லியமான செயல்பாடுகள், தேசிய இலக்குகளை அடைவதற்கான உறுதியை வெளிப்படுத்தியது. அவரது தலைமைத்துவம், பல்வேறு வகையான செயல்பாட்டுச் சூழல்களில், இந்திய விமானப்படை துணிச்சலுடனும், உறுதியுடனும் செயல்படும் திறனை மேலும் வலுப்படுத்தியது.

செயல்பாட்டுத் தலைமைத்துவத்தைக் கடந்து, இந்திய விமானப்படையின் அனைத்து நிலைகளிலும் உள்ள வீரர்களுடன், அவர் கொண்டிருந்த வலுவான, தனிப்பட்ட பிணைப்புக்காக ஏர் சீஃப் மார்ஷல் ஏ பி சிங் என்றென்றும் நினைவுகூரப்படுவார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பொது நிர்வாக சீர்திருத்தங்கள் அவசியம் : குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தல்

சென்னை – 1 நவம்பர், 2026 வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பொது நிர்வாக சீர்திருத்தங்கள் அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய பொது நிர்வாக அமைப்பின் 72-வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், மத்திய இணையமைச்சரும், இந்திய பொது நிர்வாக அமைப்பின் நிர்வாகக் குழுவின் தலைவருமான டாக்டர் ஜிதேந்திர சிங், அதன் தலைமை இயக்குநர் டாக்டர் சுரேந்திர குமார் பாக்டே, பொதுக்குழு, நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், மண்டல, உள்ளூர் கிளைகளின் பிரதிநிதிகள், பிற முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

'தேசிய ஒற்றுமை தினம்', சர்தார் வல்லபாய் படேலின் 151-வது பிறந்த தினத்தையொட்டி இந்த நிகழ்வு அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், 'இந்தியாவின் இரும்பு மனிதர்' என்று போற்றப்படும் சர்தார் படேலுக்கு மரியாதை செலுத்தினார். நூற்றுக்கணக்கான சமஸ்தானங்களை ஒன்றிணைத்து, இந்தியாவை ஒரு தேசமாக உருவாக்கியவர் சர்தார் படேல் என்று அவர் குறிப்பிட்டார்.

2026-ம் ஆண்டில், இந்த அமைப்பு மேற்கொண்ட முக்கியமான நிறுவன சீர்திருத்தங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்த அவர், குறிப்பாக, மறுவடிவமைப்பு செய்யப்பட்ட 52-வது மேம்பட்ட தொழில்முறைத் திட்டம், கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டம், மத்திய குடிமைப் பணிகள், மத்திய கணக்குகள் சேவையைச் சேர்ந்த அதிகாரிகளின் பங்களிப்பு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டினார்.

தேசிய ஒற்றுமை தினத்தையொட்டி நடைபெற்ற ஒற்றுமைக்கான ஓட்டத்தில் மத்திய சட்டத்துறை பங்கேற்பு

சென்னை – 1 நவம்பர், 2026 மத்திய சட்டம், நீதித்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள சட்டத்துறை, 2026 அக்டோபர் 31 அன்று தேசிய ஒற்றுமை தினத்தையொட்டி, புது தில்லியில் உள்ள மேஜர் தயான் சந்த் தேசிய மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒற்றுமைக்கான ஓட்டத்தில் பங்கேற்றது.

இந்த ஒற்றுமைக்கான ஓட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். சர்தார் வல்லபாய் படேலின் 151-வது பிறந்த தினத்தைக் குறிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஓட்டம், நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, பிணைப்பைப் பேணிக் காப்பதற்கான ஒட்டுமொத்த உறுதியான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் வகையில் இருந்தது.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு அமித் ஷா, இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பில், சர்தார் படேல் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பை எடுத்துரைத்தார். மேலும், இந்தியாவின் மொழி, கலாச்சாரம், மத பன்முகத்தன்மையே நாட்டின் வலிமை என்று அவர் குறிப்பிட்டார். போதைப்பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த அவர், இது நாட்டின் இளைஞர்களுக்கும், எதிர்காலத்திற்கும் மிக அவசியமானது என்று கூறினார்.

சட்டத்துறையின் செயலாளர் டாக்டர் ராஜீவ் மணி, அந்தத் துறையின் மூத்த அதிகாரிகள், பணியாளர்களுடன் இணைந்து இந்த ஒற்றுமைக்கான ஓட்டத்தில் பங்கேற்றார். இது தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, கூட்டுப் பொறுப்புணர்வு ஆகிய கொள்கைகளின் மீது சட்டத்துறை கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் 74-வது நிறுவன தின விழாவை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா நாளை புது தில்லியில் தொடங்கி வைக்கிறார்

சென்னை – 1 நவம்பர், 2026 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (இபிஎஃப்ஓ) தனது 74-வது நிறுவன தினக் கொண்டாட்ட நிகழ்ச்சியை மத்திய தொழிலாளர், வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் நாளை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய தொழிலாளர்,வேலை வாய்ப்பு அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், மத்திய அறங்காவலர் வாரிய உறுப்பினர்கள், இபிஎஃப்ஓ அமைப்பின் அதிகாரிகள், பணியாளர்கள், முதலாளிகள், தொழிலாளர்கள் உட்பட பலர் பங்கேற்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இபிஎஃப்ஓ அமைப்பின் முக்கிய முன்முயற்சிகளைத் தொடங்கி வைக்கிறார். இதில், ரூ 1,000 வரை இருப்புத் தொகை கொண்ட, நீண்டகாலமாகச் செயல்பாட்டில் இல்லாத கணக்குகளைத் தானாகவே தீர்வு செய்யும் வசதி, வாட்ஸ்அப் வாயிலாக இபிஎஃப்ஓ சேவைகளை வழங்கும் வசதி போன்றவை அடங்கும்.

மேலும், விழாவிற்காக அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளைப் பார்வையிடும் மத்திய அமைச்சர், அறிவு உருவாக்கம், நிறுவனக் கற்றல், சட்ட விழிப்புணர்வு, கனிவான நிர்வாகம் ஆகியவற்றில் இபிஎஃப்ஓ அமைப்பு கொண்டுள்ள அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறும்.

இதனுடன், மண்டல அலுவலகங்கள், மண்டல அளவிலான பிரிவுகள், தனிப்பட்ட அதிகாரிகள், பணியாளர்களின் சிறப்பான பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக, 'பவிஷ்ய நிதி விருதுகள் 2026' -ஐயும் மன்சுக் மாண்டவியா வழங்குகிறார்.

கைவினைப்பொருள் கண்காட்சி புதுதில்லியில் நாளை தொடங்குகிறது

சென்னை – 1 நவம்பர், 2026 கைவினைப்பொருள் கண்காட்சி, புது தில்லியில் நாளை தொடங்குகிறது.

திங்கள்கிழமை அன்று கைவினைப்பொருள் கண்காட்சியை, மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் தொடங்கி வைக்கிறார்.

தேசியத் தலைநகரில் உள்ள ஜனன்ஏ தில்லி ஹாட்டில், நாளை முதல் நவம்பர் 15-ம் தேதி வரை, 15 நாட்களுக்கு இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்த கண்காட்சியை மத்திய சமூக நீதி, அதிகாரமளித்தல் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில், மாற்றுத்திறனாளிகள் அதிகாரமளித்தல் துறையின் செயலாளர் திருமதி வி வித்யாவதி, தேசிய பட்டியலினத்தவருக்கான நிதி, மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு பிரபாத் தியாகி, தேசிய மாற்றுத்திறனாளி நிதி, மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு அசுதோஷ் ஜெயின் உள்ளிட்ட அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

பல்வேறு சமூகக் குழுக்கள், மக்கள் தங்களின் படைப்பாற்றல், திறமை, பாரம்பரிய கைவினைத் திறன்களை வெளிப்படுத்துவதற்கு ஒரு தளத்தை வழங்குவதுடன், அவர்களின் தயாரிப்புகளை ஏராளமான வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்கும் வாய்ப்புகளை உருவாக்குவதையும் இந்த கண்காட்சி நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கிறார். 2022-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும், இந்த கைவினைப் பொருட்கள் கண்காட்சி மூலம், 1,000-க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்

நடிகர் யஷ் குழந்தைகளுக்கு மறக்க முடியாத அனுபவம் தந்த 'ராமாயணா' திரைப்படம்!

சென்னை – 1 நவம்பர், 2026 நடிகர் யஷ் குழந்தைகளுக்கு மறக்க முடியாத அனுபவம் தந்த 'ராமாயணா' திரைப்படம்! நமித் மல்ஹோத்ராவின் பிரம்மாண்ட படைப்பான 'ராமயணா' திரைப்படத்தின் பிரத்யேக முன்னோட்டத் திரையிடலை லாஸ் ஏஞ்சல்ஸில் பார்த்ததன் மூலம், ராக்கிங் ஸ்டார் யஷ் மற்றும் ராதிகா பண்டித் தம்பதியின் குழந்தைகளான ஏழு வயதாகும் ஐரா மற்றும் இன்று (அக்டோபர் 30) தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடும் யதர்வ் ஆகியோருக்கு 'ராமாயணா' திரைப்படம் மறக்க முடியாத ஸ்பெஷல் நினைவாக எப்போதும் இருக்கும். இப்படத்தை, நமித் மல்ஹோத்ராவின் பிரைம் ஃபோகஸ் நிறுவனத்துடன் இணைந்து, நடிகர் யஷ்ஷின் மான்ஸ்டர் மைண்ட் கிரியேஷன்ஸ் நிறுவனமும் தயாரித்துள்ளது. அத்தோடு, ராவணன் கதாபாத்திரத்திலும் யஷ் நடித்துள்ளார். நடிகர் யஷ்ஷின் திரைப்பயணத்தில் முக்கிய மைல்கல்லான இந்த பிரம்மாண்டமான திரைப்படத்தை அவரது குழந்தைகள் பார்த்திருப்பதும் நெகிழ்வான தருணமாக அமைந்துள்ளது. இதில் மற்றொரு சுவாரஸ்யமான விஷயம் ஐரா மற்றும் யதர்வ் பெயர்களுக்கு பின்னால் இருக்கும் காரணம்தான். ஐரா என்ற பெயர், மகாலட்சுமியின் மற்றொரு பெயரான ஐராவதியிலிருந்தும், யதர்வ் என்ற பெயருக்கு 'முழுமையானவன்' என்றும் பொருள். மேலும், யஷ், ராதிகா மற்றும் ஐரா ஆகிய மூவரின் பெயர்களை இணைத்தே யதர்வ் என்ற பெயரைத் தேர்வு செய்ததாகவும் யஷ் மற்றும் ராதிகா தெரிவித்துள்ளனர். இப்போது 'ராமாயணா' திரைப்படம் அவர்களின் நினைவுகளில் தனியிடம் பிடித்திருப்பதன் மூலம், இந்த இதிகாசத்திற்கும் யஷ் குடும்பத்திற்கும் இடையே அழகான தொடர்பு உருவாகியுள்ளது. இன்னும் ஐந்து நாட்களில் அதாவது, நவம்பர் 5 ஆம் தேதி வெளியாகிறது 'ராமாயணா' திரைப்படம் வெளியாகிறது. இப்போதே உங்கள் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யுங்கள்!

அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்களுக்கான அகவிலைப்படி 3% உயர்வு: தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை – 1 நவம்பர், 2026 சென்னை: அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 60 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 63 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர் விஜய் அவவித்துள்ளார். இது தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு, மக்கள் நலனை அவர்கள் முன்னிறுத்தி பல்வேறு நலத்திட்டங்களை வகுத்து அவற்றைச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களை வடிவமைப்பதிலும் அவற்றை திறம்பட நடைமுறைப்படுத்துவதிலும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு ஜூலை 1 2026 முதல் அகவிலைப்படி 60 சதவீதத்திலிருந்து 63சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் முதல்வர் விஜய் இதனை கனிவுடன் பரிசீலித்து ஜூலை 1 2026 முதல் மாநில அரசு பணியாளர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

சென்னை பெருநகர காவல், சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையில், சாலிகிராமம் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் சைபர் குற்றங்கள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது

சென்னை – 1 நவம்பர், 2026 சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ், இ.கா.ப., அவர்களின் உத்தரவுப்படி, கூடுதல் காவல் ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு அவர்களின் அறிவுரையின்பேரில், சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.K.உஷாராணி தலைமையில் இன்று (31.10.2026) காலை, சென்னை, சாலிகிராமம், அருணாச்சலம் ரோடு சாலிகிராமம், Horizone Residence அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் குடியிருப்பாளர்களிடம் சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இன்ஸ்டாகிராம், முகநூல், X-(twitter) தளம், Snapchat, மற்றும் வாட்சப் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்தும், டிஜிட்டல் கைது, (Digital Arrest), ஆன்லைன் முதலீட்டு மோசடி (Online Investment scam), ஆன்லைன் வர்த்தக மோசடி (Online Trading scam) இணையவழி பின்தொடர்தல் (Cyber Stalking), இணையவழி ஏமாற்றுதல் (Phishing), இணையவழி துன்புறுத்தல் (Cyber bullying) குறித்தும், கடன் செயலி மோசடி, பரிசு மோசடி, (Gift Scam) கூரியர் மோசடி, (Courier Scam), திருமண இணைய மோசடி (Matrinomial Scam), பாஸ் பெயரில் நடைபெறும் பண மோசடி (Boss Scam) உள்ளிட்ட பல்வேறு சைபர் குற்றங்கள் மற்றும் இதர இணையவழி மோசடிகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் பாஸ்வேர்டு, OTP, CVV எண், வங்கிக் கணக்கு எண், தனிப்பட்ட தகவல்கள், புகைப்படங்கள், வீடியோக்கள், வீடு மற்றும் பிற முக்கிய விவரங்களை தேவையில்லாமல் சமூக வலைதளங்களிலோ, இணையத்திலோ யாருடனும் பகிராமல் பாதுகாப்புடன் கையாள்வது குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், ஏதேனும் சைபர் துன்புறுத்தல், மிரட்டல் அல்லது இணையவழி மோசடியை எதிர்கொண்டால், சைபர் குற்ற உதவி எண் 1930-ஐ தொடர்புகொள்வது மற்றும் www.cybercrime.gov.in என்ற National Cyber Crime Reporting Portal மூலம் புகார் அளிப்பது குறித்து விளக்கப்பட்டு, சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் விநோகிக்கப்பட்டு, நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகளும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் குடியிருப்பு நல சங்க நிர்வாகிகள் மற்றும் குடியிருப்பில் வசித்து வரும் முதியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர்.

உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் இந்தியாவின் மனிஷா சாதனை

சென்னை – 1 நவம்பர், 2026 உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் மகளிர் 59 கிலோ எடை பிரிவில் இந்திய வீராங்கனை மனிஷா பன்வாலா சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நேற்று நடந்த பைனலில் பான் அமெரிக்க சாம்பியன் அபிகெய்ல் நெட்டேவுடன் மோதிய மனிஷா (29 வயது) தொடக்கத்தில் 0-6 என பின்தங்கினாலும், பின்னர் தொடர்ச்சியாக புள்ளிகளைக் குவித்து 8-6 என்ற கணக்கில் வென்று தங்கப் பதக்கத்தை முத்தமிட்டார். உலக மல்யுத்த சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமை மனிஷாவுக்கு கிடைத்துள்ளது.

மெட்ராஸ் ரவுண்ட் டேபிள்-1 சார்பில், "நாளை (01.11.2026) ஞாயிற்றுக்கிழமையன்று 5வது சென்னை ரன்ஸ் மாரத்தான்" போட்டி நடைபெற உள்ளது

சென்னை – 1 நவம்பர், 2026 மெட்ராஸ் ரவுண்ட் டேபிள்-1 சார்பில், "நாளை (01.11.2026) ஞாயிற்றுக்கிழமையன்று 5வது சென்னை ரன்ஸ் மாரத்தான்" போட்டி நடைபெற உள்ளது. இப்போட்டி காலை 04.15 மணியளவில் நேப்பியர் பாலம் முதல் ML பார்க் சந்திப்பு வரை காமராஜர் சாலை மற்றும் DGS தினகரன் சாலை வழியாக நடைபெற உள்ளது. இம்மாரத்தான் போட்டி 21.1கி.மீ, 10கி.மீ, 5கி.மீ மற்றும் 3 கி.மீ. என நான்கு பிரிவுகளாக நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு, நாளை (01.11.2026) அதிகாலை 03.00 மணிமுதல் கீழ்க்கண்ட போக்குவரத்து மாற்றங்கள் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையால் மேற்கொள்ளப்பட உள்ளன.

1. RBI வடக்கு பகுதியில் இருந்து உழைப்பாளர் சிலை (Labour Statue) நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும் போர் நினைவுச் சின்னம் (War Memorial) சந்திப்பில் இருந்து Flag staff சாலை- Wallajah Point-அண்ணாசாலை வழியாகத் தங்களது இலக்கை அடைய திருப்பிவிடப்படும்.

2. அண்ணா சிலை பகுதியில் இருந்து தொழிலாளர் சிலை நோக்கிச் செல்லும் வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. அவை Wallajah சாலை சந்திப்பில் திருப்பிவிடப்பட்டு, Bells சாலை வழியாகத் தங்களது இலக்கை அடையலாம்.

3. பாரதி சாலையில் இருந்து கண்ணகி சிலை நோக்கிச் செல்லும் வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. அவை பாரதிசாலை, கேனால் சாலை சந்திப்பில் இருந்து Wallajah சாலை நோக்கி திருப்பி விடப்படும்.

4. டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் இருந்து காந்தி சிலைநோக்கிச் செல்லும் வாகனங்கள் V.M.தெரு சந்திப்பில் திருப்பி விடப்பட்டு, ராயப்பேட்டை நெடுஞ்சாலை லஸ் கார்னர்- ஆர்.கே.மடம் சாலை வழியாகத் தங்களது இலக்கை அடையலாம்.

5. தெற்கு கால்வாய் சாலையில் இருந்துவரும் வாகனங்கள் சாந்தோம் நெடுஞ்சாலை வழியாக மட்டுமே செல்ல அனுமதிக்கப்படும். MRC சந்திப்பு நோக்கி வலதுபுறம் திரும்ப அனுமதி இல்லை.

பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் மேற்கண்ட போக்குவரத்து மாற்றங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை கேட்டுக்கொள்கிறது.

On account of "5th Edition of Chennai Runs Marathon" organized by Madras Round Table-1 on Sunday Nov 01, 2026, in the following 4 categories of Marathon (i-e) 21.1 Km, 10 Km, 5 Km and 3 Km Run at morning 04.15 hrs from Napier bridge to ML Park Junction via. Kamarajar Salai, DGS Dinakaran Salai, Greater Chennai Traffic Police will make following traffic arrangements made from 03.00 am:

All the outgoing vehicles coming from RBI North intending towards Labour Statue will be diverted at War memorial - Flagstaff road - Wallajah Point –Anna salai to reach their destination.

The vehicles coming from Anna Statue will not be allowed to Labour Statue and they will be diverted at Wallajah Road x Bells Road Jn to Bells Road to reach their destination.

The vehicles coming from Bharathi Salai will not be allowed to Kannagi Statue and they will be diverted at Bharathi Salai X Canal Road Jn towards Wallaja Road to reach their destination.

The vehicles coming from Dr.Radhakrishnan Salai towards Gandhi Statue will be diverted at V.M. Street towards Royapettah High road, Luz Corner, R.K.Mutt Road to reach their destination.

Vehicle coming from South Canal Road will be allowed towards Santhome High road and will not be allow to take right turn towards MRC Junction

Public and Motorists are requested to cooperate.

தி.மு.க சார்பில் சென்னை பெருநகர காவல்துறை ஆணையடிடம் இ. பரந்தாமன் புகார்

சென்னை – 1 நவம்பர், 2026 திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், த.வெ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் 31.10.2026 அன்று நடத்தப்படும் மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் குறித்து தி.மு.கழகத்தினருக்கும், பொது மக்களுக்கும் காணொலி பதிவின் வாயிலாக அழைப்பு விடுத்திருந்தார்.

அதனை த.வெ.க.வின் அதிகாரபூர்வ தகவல் தொழில்நுட்ப அணியின் சமூக வளத்தளத்தில் கேலியும், கிண்டலும் செய்யும் வகையில் விஷமதனமான கருத்துக்களை பதிவேற்றம் செய்து தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் புகழுக்கும், பெயருக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் வெளியிட்டதை கண்டித்து தி.மு.கழகத்தின் சார்பில் இன்று (31.10.2026) சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் அவர்களிடம் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இ. பரந்தாமன் அவர்கள் புகார் மனு அளித்துள்ளார்.

நீட் தேர்வுக்கு எதிராக போராடியவர்கள் மீதான வழக்குகளை ரத்து செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை – 1 நவம்பர், 2026 நீட் தேர்வுக்கு எதிராக போராடியவர்கள் மீதான வழக்குகளை ரத்து செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்; தமிழ்நாட்டில் 10.05.2026 முதல் 31.07.2026 வரை நீட்தேர்வுக்கு எதிராக பல்வேறு காலகட்டங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. இப்போராட்டங்களில் ஈடுபட்ட சுமார் 1,800 நபர்கள் மீது பல்வேறு காவல் நிலையங்களில் மொத்தம் 65 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அவை பல்வேறு நிலைகளில் நிலுவையில் உள்ளன.

தமிழ்நாட்டில் நீட்தேர்வுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது பதியப்பட்ட வழக்குகள் குறித்தும், அவற்றின் தற்போதைய நிலை குறித்தும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதனடிப்படையில், முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசு இவ்வழக்குகளைத் திரும்பப் பெறுவது குறித்து கவனமுடன் பரிசீலனை செய்து, நீட் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட சுமார் 1,800 நபர்கள் மீது பதிவு செய்யப்பட்ட 65 குற்ற வழக்குகளையும் திரும்பப் பெறுவதற்கான உரிய சட்டப்பூர்வ நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

ரூ.200 கோடி மோசடி வழக்கில் ஆஜராக படப்பிடிப்பை பாதியில் நிறுத்திவிட்டு மும்பை ஓடிய நடிகை நோரா: பாலிவுட்டில் பரபரப்பு

மும்பை – 1 நவம்பர், 2026 ரூ.200 கோடி மோசடி வழக்கில் டெல்லி நீதிமன்றம் அதிரடியாக சம்மன் அனுப்பியதால், நடிகை நோரா பதேகி படப்பிடிப்பை பாதியில் நிறுத்திவிட்டு மும்பைக்கு விரைந்தார். திகார் சிறையில் இருந்தபடி தொழிலதிபர்களின் குடும்பத்தினரை மிரட்டி ரூ.200 கோடி பறித்த கொடூர மோசடி மன்னன் சுகேஷ் சந்திரசேகரின் முறைகேடுகள் குறித்து அமலாக்கத்துறை தீவிர விசாரணை நடத்தி வருகிறது. இதில் இடைத்தரகர் பிங்கி இரானி மூலமாக சுகேஷ் சந்திரசேகர் அளித்த சொகுசு பி.எம்.டபிள்யூ. கார் உள்ளிட்ட பல கோடி ரூபாய் மதிப்பிலான ஆடம்பரப் பரிசுகளைப் பெற்றதாக பாலிவுட் நடிகை நோரா பதேகி மீது அடுக்கடுக்கான புகார்கள் எழுந்தன.

இந்த விவகாரத்தில் அமலாக்கத்துறையின் 3வது துணை குற்றப்பத்திரிகையில் அரசுத் தரப்பு 3வது சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள நோரா பதேகி, வரும் நவம்பர் 2ம் தேதி டெல்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று கூடுதல் அமர்வு நீதிபதி ககன்தீப் சிங் சம்மன் பிறப்பித்துள்ளார். இந்த நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 'தி ராயல்ஸ்' என்ற புதிய இணையத் தொடரின் படப்பிடிப்பில் இருந்த அவர், பணியை உடனடியாக ரத்து செய்துவிட்டு நள்ளிரவில் விமானம் மூலம் அவசரமாக மும்பை சென்றடைந்தார்.

அங்கு தனது வழக்கறிஞர்களுடன் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் குறித்து தீவிர ஆலோசனை மேற்கொண்டு வரும் நோரா பதேகி, 'சென்னையில் நடந்த இந்த தொடர் விசாரணை தன்னை மன உளைச்சலுக்கும் நற்பெயருக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக வேதனை தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

ஹார்முஸ் ஜலசந்தியில் 27 இந்திய மாலுமிகளுடன் சென்ற கப்பல் மீது கண்ணிவெடி தாக்குதல்: அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதால் பதற்றம்

சென்னை – 1 நவம்பர், 2026 ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே கடந்த பிப்ரவரி மாதம் மோதல் வெடித்ததில் இருந்தே, ஹார்முஸ் ஜலசந்தி கடல் பகுதியில் போக்குவரத்து கட்டுப்பாடுகளை மீறுவதாக கூறி வணிகக் கப்பல்கள் மீது ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் சூழலில், கடந்த 2017ம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வரும் லிம்பெட் கண்ணிவெடி தாக்குதல் தற்போதைய மோதலுக்குப் பிறகு இப்போதுதான் முதல்முறையாக நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஓமனின் கசாப் பகுதியில் இருந்து 46 கி.மீட்டர் தொலைவில் பனாமா நாட்டின் கொடியுடன் 27 இந்திய மாலுமிகளை ஏற்றிக்கொண்டு சென்ற 'எம்டி லூயிஸ் 1' என்ற கச்சா எண்ணெய் டேங்கர் கப்பலின் அடிப்பகுதியில், ஒரு சிறிய படகில் வந்த மர்ம நபர்கள் 2 லிம்பெட் கண்ணிவெடிகளை இணைத்துவிட்டு தப்பினர். அவை பயங்கர சத்தத்துடன் வெடித்ததில் கப்பலின் இன்ஜின் அறையில் தீப்பிடித்து கப்பல் தற்காலிகமாக செயலிழந்த போதிலும், இந்திய ஊழியர்கள் துரிதமாக செயல்பட்டு தீயை அணைத்ததால் பாதிப்பு ஏதுமின்றி கப்பல் தொடர்ந்து தனது பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத்தின் புது முயற்சி! *இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 100 நாட்டுப்புற இசைக் கலைஞர்களுடன்

சென்னை – 1 நவம்பர், 2026 *இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத்தின் புது முயற்சி!* *இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 100 நாட்டுப்புற இசைக் கலைஞர்களுடன் 'எல்லம்மா' படத்தின் டைட்டில் பாடலைப் பதிவு செய்த ராக்ஸ்டார் டிஎஸ்பி!* 'பலாகம்' படத்தின் மூலம் கவனம் ஈர்த்த வேணு எல்தண்டி இயக்கத்தில், தில் ராஜு வழங்க, சிரிஷ் தயாரிப்பில், இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத் கதாநாயகனாக நடிக்கும் 'எல்லம்மா' திரைப்படத்தின் அறிவிப்பு வெளியானது முதலே திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் மத்தியில் இந்தத் திரைப்படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், ராக்ஸ்டார் தேவி ஸ்ரீ பிரசாத், இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் கலாச்சாரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 100 பாரம்பரிய நாட்டுப்புற இசைக் கலைஞர்களுடன் இணைந்து, 'எல்லம்மா' படத்தின் டைட்டில் பாடலைப் பதிவு செய்துள்ளார். விரைவில் வெளியாக இருக்கும் இந்தப் பாடல் ரசிகர்கள் மத்தியில் நிச்சயம் வரவேற்பைப் பெறும். தெலுங்கு, தமிழ், இந்தி, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய ஐந்து மொழிகளில் 'எல்லம்மா' திரைப்படம் வரும் மார்ச் 5 ஆம் தேதி உலகம் முழுவதும் பிரம்மாண்டமாக திரையரங்குகளில் வெளியாகிறது.

6 உழவர் சந்தைகளில் நாளை முதல் இயற்கை விளை பொருட்கள் விற்பனை துவக்கம்

சென்னை – 1 நவம்பர், 2026 திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 6 உழவர் சந்தைகளில்வாரந்தோறும் இயற்கை விளைபொருட்கள் விற்பனை செய்யும் திட்டம் நாளை முதல் தொடங்கப்பட உள்ளது. இதன்படி, அம்பத்தூர், திருத்தணி, திருவள்ளூர் ஆகிய உழவர் சந்தைகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாரவாரிக்குப்பம் உழவர் சந்தையில் ஒவ்வொரு சனிக்கிழமையும் பருத்திப்பட்டு, ◌ பரம்பாக்கம் ஆகிய உழவர் சந்தைகளில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இயற்கை விளைபொருட்கள் விற்பனை நடைபெறும். திருவள்ளூரில் உள்ள உழவர்சந்தையில் ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி இரவு 7 மணி வரை இயற்கை வேளாண் சந்தை நடைபெற்று வருகிறது.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்கள், இயற்கை மற்றும் அங்கக வேளாண் விளைபொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல், இயற்கை விவசாயிகள் தங்களது விளைபொருட்களை இடைத்தரகர்களின்றி நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய உதவுதல் மற்றும் தமிழ்நாடு முழுவதும் இயற்கை வேளாண் விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் ஆகியவையாகும். இதன்மூலம் இயற்கை விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதுடன், நுகர்வோர் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட வேளாண் பொருட்களை நேரடியாக பெற்றுப் பயன்பெறவும் வாய்ப்பு ஏற்படும். இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் இடையிலான நேரடி சந்தைத் தொடர்பை வலுப்படுத்தவும் இந்த நடவடிக்கை உதவும்.

ராஜஸ்தான் கோயிலில் பூஜை செய்து பிரதமர் மோடிக்காக கங்கனா விரதமா?





சென்னை – 1 நவம்பர், 2026 பிரதமர் மோடிக்காக நடிகையும் பாஜக எம்.பி.யுமான கங்கனா ரணாவத் கர்வா சவுத் விரத பூஜை செய்ததாக இணையத்தில் பரவிய வீடியோவின் பின்னணியில் உள்ள உண்மை விபரம் வெளியாகியுள்ளது. பிரபல பாலிவுட் நடிகையும், பாஜக நாடாளுமன்ற உறுப்பினருமான கங்கனா ரணாவத், பிரதமர் மோடி மீது தீவிர பற்று கொண்டவராக அறியப்பட்டு வரும் நிலையில், கணவனின் நீண்ட ஆயுளுக்காக இந்து பெண்கள் மேற்கொள்ளும் 'கர்வா சவுத்' விரத பூஜையை அவர் பிரதமர் மோடிக்காக கடைப்பிடித்ததாக சமூக வலைதளங்களில் வீடியோ ஒன்று வெளியாகி கடுமையான கேலி கிண்டல்களுக்கும் கண்டனங்களுக்கும் உள்ளானது.

இந்த அபாண்டமான அவதூறு பரவிய நிலையில் நடத்தப்பட்ட உண்மை சரிபார்ப்பில், ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள கணேஷ் கோயில் மற்றும் ☐ சாமுண்டா மாதா கோயிலில் கடந்த ஜூன் 11ம் தேதி மற்றும் 12ம் தேதிகளில் கங்கனா ரணாவத் வழிபாடு நடத்திய பழைய வீடியோவை எடுத்து விஷமிகள் சிலர் வதந்தியைப் பரப்பியது தெரியவந்துள்ளது.

ஒன்றிய அரசில் பிரதமர் மோடி அதிகாரத்தில் 12 ஆண்டுகள் நிறைவு செய்ததை முன்னிட்டு, 'நாட்டு மக்களை தொடர்ந்து வழிநடத்த பிரதமர் மோடி மேலும் வலிமை பெற வேண்டும்' என்று கூறி அப்போது கங்கனா நடத்திய சிறப்பு வழிபாட்டுக் காட்சிகளை வெட்டி எடுத்து, கர்வா சவுத் நாளில் திட்டமிட்டு அவதூறு பரப்பிய இணையதள விஷமிகளின் செயல் தற்போது அம்பலமாகியுள்ளது. இந்த வீடியோ குறித்து சைபர் கிரைம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

"அதிக பணம் சம்பாதிக்க அரசியலுக்கு வந்தாரா விஜய்?" - எடப்பாடி பழனிசாமி கேள்வி

சென்னை – 1 நவம்பர், 2026 சினிமாவை விட அதிக பணம் சம்பாதிக்க விஜய் அரசியலுக்கு வந்துள்ளாரா? என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். செங்கல்பட்டு மறைமலை நகரில் அதிமுகவின் 55ஆம் ஆண்டு தொடக்க விழா கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி; த.வெ.க என்ற செடி முளைத்து 3 இலை தான் விட்டிருக்கு அதற்குள் ஆட்சிக்கு வந்துட்டு என்ன ஆட்டம் போடுறாங்க.. பொன் விழா கண்ட அ.தி.மு.கவை பார்த்து தீர்ந்து போன கட்சி என்கிறார். சில கட்சிகள் ரீல்ஸ் விடுகின்றன; ரியலாக இருக்கும் கட்சி அதிமுகதான்.

புவியியல் காண் உயிரோட்டமுள்ள அதிமுகவை பலர் உடைக்கவும் முடக்கவும் பார்க்கின்றனர். அதிமுகவை தொட்டு கூட பார்க்க முடியாது. தவெக ஆட்சிக்கு வந்த 6 மாதத்தில் மக்களுக்கு என்ன கிடைத்துள்ளது? தவெகவின் 6 மாத ஆட்சியில் மக்களுக்கு கிடைத்த பரிசு அரிசி விலை உயர்வுதான். ஒருபுறம் விலைவாசி உயர்வு, மறுபுறம் வேலையில்லா திண்டாட்டம்தான் தமிழ்நாட்டில் உள்ளது. சினிமாவை விட அதிக பணம் சம்பாதிக்க விஜய் அரசியலுக்கு வந்துள்ளாரா? ரூ.14,000 கோடி சம்பாதித்த முதல்வர் விஜய் அதற்கு வரி செலுத்தினாரா?

கொடுத்து சிவந்த கரமான எம்ஜிஆர் தனது சொத்துகளை பிறருக்கு எழுதி வைத்ததுபோல் விஜய் எழுதி வைப்பாரா? தவெக ஆட்சியிலும் லஞ்சம் இல்லாமல் எந்த அரசு அலுவலகத்திலும் வேலை நடப்பதில்லை. மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்று தெரியாத நிலைதான் உள்ளது. துணை ஜனாதிபதி, நான் சென்றபோது கூட மீனாட்சி அம்மன் கோயிலில் மின் வெட்டு ஏற்பட்டது. மேடையில் பேசும்போதே மின்வெட்டு ஏற்பட்டு விடுமோ என நினைக்கும் சூழல் உள்ளது. நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்துக்கு கரூர் சென்று முதல்வர் விஜய் ஆறுதல் சொன்னாரா?

நெரிசலில் சிக்கி உயிரிழந்தோர் குடும்பத்துக்கு கரூர் சென்று முதல்வர் விஜய் ஆறுதல் சொன்னாரா? கரூர் சம்பவம் நடந்த பிறகு தவெக தலைமை அலுவலகம் 15 நாட்கள் மூடப்பட்டது. வேடந்தாங்கல் பறவை போல அமைச்சர் நிர்மல்குமார் பல கட்சிகளுக்கு சென்று வந்தவர். விஜய் தமிழ்நாட்டின் முதல்வர் அல்ல, அவருக்கு மேல் 3 முதலமைச்சர்கள் உள்ளனர் என்று கூறினார்.

கோயில் அறங்காவலர் நியமனத்தில் விதிமீறல்; தலைமை நீதிபதியின் பெயரை தவறாக பயன்படுத்திய சிறப்பு அதிகாரிக்கு கண்டனம்: மாவட்ட நீதிபதியின் உத்தரவையும் ரத்து செய்தது ஐகோர்ட்

மும்பை – 1 நவம்பர், 2026 நாசிக் கோயில் அறங்காவலர் நியமனத்தில் அப்போதைய தலைமை நீதிபதியின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தி உத்தரவு பிறப்பித்த சிறப்பு அதிகாரியின் சட்டவிரோத நடவடிக்கையை மும்பை உயர்நீதிமன்றம் அதிரடியாக ரத்து செய்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் அருகே அமைந்துள்ள புகழ்பெற்ற ஸ்ரீ சப்தசிருங்கி நிவாசினி தேவி கோயில் அறக்கட்டளையின் புதிய அறங்காவலர்களைத் தேர்வு செய்யும் பணிகள் மாவட்ட முதன்மை மற்றும் செசன்ஸ் நீதிமன்ற நீதிபதி தலைமையில் முழு வீச்சில் நடைபெற்று வந்தன. இதன்படி, கடந்த மார்ச் 12ம் தேதி தகுதிவாய்ந்த அறங்காவலர்களின் பரிந்துரைப் பட்டியல் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

ஆனால், அடுத்த இரண்டு நாட்களில், அதாவது மார்ச் 14ம் தேதி, அப்போதைய மும்பை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் சிறப்பு அதிகாரியாகப் பதவி வகித்த 4வது எதிர்மனுதாரர் கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில், தலைமை நீதிபதியின் வாய்மொழி உத்தரவின்படி கோயில் அறங்காவலர் பரிந்துரைப் பட்டியல் இணையதளத்தில் இருந்து உடனடியாகத் திரும்பப் பெறப்படுவதாகவும், மறு உத்தரவு வரும் வரை இப்பட்டியல் நிறுத்தி வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. மகாராஷ்டிரா பொது அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தலைமை நீதிபதிக்கு இதுபோன்ற உத்தரவை பிறப்பிக்க அதிகாரம் இல்லாத நிலையில், சிறப்பு அதிகாரியின் இந்த அத்துமீறிய செயலால் பாதிக்கப்பட்ட 5 நபர்கள் மும்பை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த மனுவை நீதிபதிகள் ஜி.எஸ்.குல்கர்னி மற்றும் டாக்டர் நீலா கோகலே ஆகியோர் அடங்கிய அமர்வு விரிவாக விசாரித்தது. அப்போது, தலைமை நீதிபதியின் பார்வைக்கோ அல்லது ஒப்புதலுக்கோ எந்தவொரு கோப்பும் அனுப்பப்படாமல், சிறப்பு அதிகாரி தன்னிச்சையாக தலைமை நீதிபதியின் பெயரைப் பயன்படுத்தி அப்பட்டமான அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டது அம்பலமானது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதிகள், 'தலைமை நீதிபதியின் செயலகத்தில் பணிபுரிவதால் மட்டுமே, நிர்வாக ரீதியாகக் கூட தலைமை நீதிபதியால் பிறப்பிக்க முடியாத இத்தகைய சட்டவிரோத உத்தரவுகளை வெளியிட எவருக்கும் அதிகாரம் கிடையாது.

இது உயர் பதவியின் கண்ணியத்தைச் சீர்குலைக்கும் மிகக் கடுமையான ஒழுங்கீனச் செயல்' என்று எச்சரித்தனர். மேலும், சட்ட நெறிமுறைகளை மீறி சிறப்பு அதிகாரி பிறப்பித்த சர்ச்சைக்குரிய சுற்றறிக்கையையும், அதன் அடிப்படையில் நாசிக் மாவட்ட முதன்மை நீதிபதி பிறப்பித்த நியமனத் தடை உத்தரவையும் உயர்நீதிமன்றம் முற்றிலுமாக ரத்து செய்து உத்தரவிட்டது.

தாழ்ந்து செயல்படுகிறது தவெக

சென்னை – 1 நவம்பர், 2026 தமிழ்நாடு சைபர் கிரைம் என்பது TVK-வின் மற்றுமொரு ஐடி விங்கா.?

காவல்துறை நடவடிக்கை எடுக்காவிட்டால், நீதிமன்றத்தை நாடி தீர்வு காண்போம் - இ.பரந்தாமன் பேட்டி

திமுக மகளிர் அணியின் தலைமையில், ஊழல் நிறைந்த ஆளும் TVK அரசைக் கண்டித்தும், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, விலைவாசி உயர்வு மற்றும் பெண்கள், குழந்தைகள் மீது நிகழும் வன்முறைகளைக் கண்டித்தும் மாபெரும் போராட்டம் இன்று நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக, 30-ஆம் தேதியன்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான நமது மதிப்பிற்குரிய கழகத் தலைவர் அவர்கள் பொதுமக்களை இந்தப் போராட்டத்தில் பெருமளவில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்து ஒரு காணொளியை வெளியிட்டார்.

தவெக அதிகாரப்பூர்வ சமூக ஊடகப் பக்கம், எவ்வித வெட்கமுமின்றி, எங்கள் தலைவர் பேசும் அந்தக் காணொளியைத் திரித்து, புனைந்து, எங்கள் தலைவரின் நற்பெயரையும், எங்கள் ஆட்சியையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகத்தையும் களங்கப்படுத்தும் நோக்கில் மிகவும் இழிவான ஒரு காணொளியைப் பதிவிட்டுள்ளது. நேற்றைய அந்தப் பதிவு, திமுக தலைவரே தனது பதவிக்காலம் மிகவும் மோசமாக இருந்தது என்று கூறுவது போல, சாமானிய மக்களுக்கு விஷயங்களைச் சித்தரித்திருந்தது. இதுபோன்ற காணொளியை வெளியிட்டு, பொதுமக்களிடையே தவறான, தீய கருத்துக்களைப் பரப்பியதன் மூலம், டிவிகே-வின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, இந்தியாவில் வேறு எந்த அரசியல் கட்சியும் செய்யத் துணியாத ஒரு இழிவான செயலைச் செய்துள்ளது.

இது தொடர்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என் பெயரில், பெருநகர சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தின் இணையக் குற்றப் பிரிவில் இன்று உடனடியாக ஒரு புகாரைப் பதிவு செய்துள்ளோம். அதற்கான ஒப்புகையை நாங்கள் பெற்றுள்ளோம். தமிழக காவல்துறை, குறிப்பாக இந்த இணையப் பாதுகாப்புப் பிரிவு, பாரபட்சமின்றி செயல்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

திமுக, கட்சி அல்லது அதன் தலைவருக்கு ஆதரவாகப் பொதுமக்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் விஷயத்தில் கூட, சென்னை காவல்துறை சைபர் குற்றப்பிரிவும், உண்மையில் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அனைத்துக் காவல்துறையினரும் கூட, அந்த வீடியோக்களை இணையதளங்களில் இருந்து உடனடியாக நீக்குவார்கள். அவர்கள் மெட்டாவிடம் புகார் அளித்து, கணக்குகளை முடக்கச் செய்கிறார்கள். அவர்கள் திமுக நிர்வாகிகள் கணக்குகளை முடக்குகிறார்கள்; திமுக இளைஞர் அணி பதிவிடும் காணொளிகளை முடக்குகிறார்கள்; திமுக மகளிர் அணி பதிவிடும் காணொளிகளை முடக்குகிறார்கள்; மேலும் திமுக ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட GEN Z இளைஞர்கள் பதிவிடும் காணொளிகளையும் முடக்குகிறார்கள்.

தமிழகத்தின் இன்றைய அவல நிலை மற்றும் சீரழிந்த ஆட்சி குறித்து பொதுமக்கள் தாங்களாகவே பதிவிடும் காணொளிகளைக் கூட முடக்கவோ அல்லது அகற்றவோ விரைந்து செயல்படும் தமிழக காவல்துறை, தமிழகத்தின் மதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய திமுக தலைவரும், 70 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையும் களங்கமற்ற, தூய்மையான நற்பெயரும் கொண்டவருமான ஒருவரைப் பற்றிய காணொளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறுகிறது. அவரைப் பற்றிப் பதிவிடப்பட்ட ஒரு காணொளி மீதே இணையக் குற்றப் பிரிவால் நடவடிக்கை எடுக்க முடியவில்லையென்றால், இது என்ன மாதிரியான காவல் படை?

எங்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள சந்தேகம் என்னவென்றால், தமிழக காவல்துறை, குறிப்பாக சைபர் கிரைம் மற்ற காணொளிகளை உடனடியாக நீக்குவதிலும் கணக்குகளை முடக்குவதிலும் அவசரம் காட்டுகிறது என்பதுதான். இவ்வளவு கேவலமாக நடந்துகொள்ளும் TVK-வின் தகவல் தொழில்நுட்பப் பிரிவை அவர்கள் ஏன் இடைநீக்கம் செய்யவில்லை? அப்படியானால், நமது சந்தேகம் என்ன? தமிழ்நாடு சைபர் குற்றப்பிரிவு என்பது TVK-வின் மற்றுமொரு ஐடி விங்கா.?

நாங்கள் திமுக சார்பாக ஏராளமான புகார்களைப் பதிவு செய்துள்ளோம்; மேலும் பலமுறை பிரச்சினைகளையும் தெரிவித்துள்ளோம். திமுக அளித்த புகார்களின் அடிப்படையில், "இத்தனை பேரை நீக்கியுள்ளோம்" அல்லது "இத்தனை கணக்குகளை முடக்கியுள்ளோம்" என்று காவல்துறையால் வெளிப்படையாகக் கூற முடியுமா? மாறாக, நாம் தரும் புகார்களை அவர்கள் ஒதுக்கி வைத்துவிட்டு, தங்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கிறார்கள்.

நான் சொல்ல வருவது என்னவென்றால், அரசாங்கங்கள் மாறிக்கொண்டே இருக்கும்; ஆனால், காவல்துறை சட்டத்தைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் சட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். புகார் அளிப்பவர் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் நீங்கள், திமுக தாக்கல் செய்த புகார்களைப் புறக்கணித்துவிட்டு, அதே சமயம் டிவிகே-வின் சமூக ஊடக மாஃபியா தாக்கல் செய்த புகார்களை உடனடியாக ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கிறீர்கள். அதனால்தான், தமிழ்நாட்டின் சைபர் குற்றப் பிரிவு, TVK-யின் ஐடி விங்காக செயல்படுவதாக நாங்கள் சந்தேகிக்கிறோம்.

நாங்கள் இதை எளிதில் விட்டுவிட மாட்டோம். மற்ற புகார்களை நீங்கள் மூடிமறைப்பது போல, இதை நாங்கள் உங்களை அனுமதிக்க மாட்டோம். இது நமது தலைவருக்கு எதிராக வெளிவந்துள்ள காணொளி ஆகும். நாங்கள் இது தொடர்பாக ஏற்கனவே புகார் அளித்துள்ளோம். நியாயமான காலத்திற்குள் காவல்துறை நடவடிக்கை எடுக்காவிட்டால், நாங்கள் நீதிமன்றத்தை நாடி இதற்குத் தீர்வு காண்போம்.

இது தமிழ்நாட்டிற்கு ஒரு திருப்புமுனையாக அமையட்டும். ஒவ்வொருவருக்கும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை உண்டு. கருத்துக்கள் நியாயமானதாகவும், சட்டத்திற்கு உட்பட்டதாகவும், தனிப்பட்ட கண்ணியத்திற்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். எல்லோரும் விரும்புவது அதுதான்.

ஆனால் அதே நேரத்தில், இந்தியாவில் பாஜக மட்டுமே செய்து வந்ததைப் போல, டிவிகே மிகவும் தரம் தாழ்ந்து செயல்படுகிறது. இதுபோன்ற காரியங்களைச் செய்து வந்தது ஆர்.எஸ்.எஸ் மட்டுமே. ஆனால் இன்று, தமிழ்நாட்டில் TVK இதைச் செய்யும்போது, அவர்கள் தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு ஒரு இழிவான அரசியலைக் கற்பிக்கிறார்கள்.

இவை அனைத்தையும் பார்க்கும் முதலமைச்சருக்கு கொஞ்சமாவது தெளிவு இருக்கிறதா? அவருக்கு அரசியல் புரிதல் ஏதேனும் இருக்கிறதா? இதைச் செய்யக்கூடாது என்பதே அவரது எண்ணமா? அல்லது, இவை அனைத்தும் முதலமைச்சரின் ஒப்புதலுடன் நடக்கின்றன என்ற சந்தேகம் உள்ளதா?

இதற்கு முன்பு நீங்கள் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். முதலமைச்சராக இருப்பது ஒரு கண்ணியமான பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு, அந்தப் பதவிக்கு ஏற்ற குணநலன்களுடன் செயல்பட வேண்டும். அந்தப் பொறுப்பிற்கு ஏற்ற பண்புடன் நீங்கள் செயல்படவில்லை என்பதை உங்கள் தகவல் தொழில்நுட்பப் பிரிவு நிரூபிக்கிறது.

திமுகவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு ஏதாவது ஒன்றை வெளியிட்டால், எத்தனை ஊடகங்களும் சமூக வலைதளங்களும் அதைப் பிடித்துக்கொண்டு பெரும் அமளியை உண்டாக்குகின்றன? இருப்பினும், இன்று திமுகவின் தலைவர், தமிழகத்திற்காக உழைத்து, முதலமைச்சராக பல சாதனைகளைப் படைத்தவராக இருக்கிறார். சிறிதளவாவது கண்ணியம் பேணப்பட வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்; இல்லையென்றால் நாங்கள் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

ஆபாச பதிவால் நடிகை மன உளைச்சல்

சென்னை – 1 நவம்பர், 2026 தெலங்கானா மாநிலம் ஐதராபாத் ஜூப்ளி ஹில்ஸ் பகுதியைச் சேர்ந்த பிரபல நடிகையும், தொழிலதிபருமான 52 வயது பெண், சமீபத்தில் டிவி ரியாலிட்டி ஷோ ஒன்றில் பங்கேற்றிருந்தார். அப்போது அந்த நிகழ்ச்சியில் ஏற்பட்ட மோதல் காரணமாக, அவருடன் கலந்துகொண்ட சக ஆண் போட்டியாளர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் திட்டமிட்டு யூடியூப், எக்ஸ் தளம் மற்றும் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதள பக்கங்களில் நடிகையின் வயதைக் குறிப்பிட்டு கீழ்த்தரமான ஆபாச வசைகளையும், கேலிச் சித்திரங்களையும் தொடர்ந்து பதிவிட்டு அநாகரிக சைபர் தாக்குதலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதுகுறித்து நடிகை ஜூப்ளி ஹில்ஸ் போலீஸ் நிலையத்தில் அளித்த புகாரில், 'சமூக வலைதளங்களில் விஷமிகள் நடத்தும் இத்தகைய கீழ்த்தரமான தாக்குதல்கள் கடுமையான மன உளைச்சலையும் அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளது; பொதுமக்கள் மத்தியில் எனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் செயல்படும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று ஆபாசப் பதிவுகளின் ஆதாரங்களுடன் முறையிட்டார். புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரிக்கின்றனர்.

ரிலையன்ஸ் கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் நிறுவனம் தமிழ்நாட்டில் 28 புதிய வகைகளுடன் பிஸ்கட் தயாரிப்பு வரிசையை விரிவுபடுத்துகிறது

சென்னை – 1 நவம்பர், 2026 அஜித் குமார் பந்தய அணியுடனான பிராண்ட் கூட்டணியின் ஆதரவுடன், இன்டிபெண்டன்ஸ் பவர் அப் தயாரிப்பு இந்த விரிவாக்கத்தில் முன்னிலை வகிக்கிறது.

சென்னை, அக்டோபர் 30: ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் நுகர்வோர் பொருட்கள் பிரிவான ரிலையன்ஸ் கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் நிறுவனம், தமிழ்நாட்டில் தனது இன்டிபெண்டன்ஸ் பிராண்டின் கீழ் ஒன்பது தயாரிப்புகளையும் 28 புதிய தயாரிப்பு வகைகளையும் அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்துள்ளது. மாநிலத்தில் தனது சந்தை இருப்பை வலுப்படுத்தவும், பிஸ்கட் சந்தையில் வளர்ச்சியை விரைவுபடுத்தவும் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை குறிப்பிடத்தக்க முன்னெடுப்பாகும். இந்தத் தயாரிப்புகள் 2026 நவம்பர் 2 முதல் நுகர்வோருக்குக் கிடைக்கும்.

தமிழ்நாடு, நிறுவனத்தின் பிஸ்கட் வணிகத்திற்கு முக்கியமான சந்தையாக விளங்குகிறது. உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலமும், தயாரிப்பு வரிசையை விரிவுபடுத்துவதன் மூலமும், வணிகத்தைப் பெரிதாக்குதல், அதிகமான நுகர்வோரைச் சென்றடைதல் மற்றும் மாநிலத்தின் பிஸ்கட் சந்தையில் தனது பங்கை அதிகரித்தல் ஆகியவற்றை நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இன்டிபெண்டன்ஸ் பிஸ்கட் தயாரிப்பு வரிசை, பல்வேறு நுகர்வோர் தேவைகளையும் பயன்பாட்டுச் சூழல்களையும் பூர்த்தி செய்யும் வகையில் ஒன்பது தயாரிப்புகளைக் கொண்டுள்ளது. அவை: இன்டிபெண்டன்ஸ் பவர் அப், இன்டிபெண்டன்ஸ் பட்டர் ப்ளிஸ், இன்டிபெண்டன்ஸ் மில்கி பவர், இன்டிபெண்டன்ஸ் மேரி பிரைம், இன்டிபெண்டன்ஸ் கோகோ வெனிலா மற்றும் சாக்லேட், இன்டிபெண்டன்ஸ் க்ரீமயம் ஆரஞ்சு, இன்டிபெண்டன்ஸ் க்ரீமயம் சாக்லேட், இன்டிபெண்டன்ஸ் கோகோ போர்பன் மற்றும் இன்டிபெண்டன்ஸ் குளுக்கோஸ் பூஸ்ட்.

இந்தத் தயாரிப்புகள் அறிமுகச் சுவைக்கான சிறிய பொட்டலங்கள் ₹5-க்கும், பகிர்ந்து உண்ணும் பொட்டலங்கள் ₹10-க்கும், குடும்பப் பயன்பாட்டிற்கான பெரிய பொட்டலங்கள் ₹40 முதல் ₹125 வரையிலான விலையிலும் கிடைக்கும்.

இந்தத் தயாரிப்பு வரிசையில் இன்டிபெண்டன்ஸ் பவர் அப் மற்றும் இன்டிபெண்டன்ஸ் மில்கி பவர் ஆகியவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பவர் அப் பிஸ்கட்டில் பால், குளுக்கோஸ் மற்றும் புரதம் ஆகிய மூன்றும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அன்றாடப் பயன்பாட்டுப் பிஸ்கட் பிரிவில் தனித்துவமான தயாரிப்பை நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது.

ரிலையன்ஸ் கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு. டி. கிருஷ்ணகுமார் கூறியதாவது: “தமிழ்நாடு எங்கள் பிஸ்கட் வணிகத்திற்கு ஒரு முக்கியமான சந்தையாகும். மாறிவரும் நுகர்வோர் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வகையில் எங்கள் தயாரிப்பு வரிசையை விரிவுபடுத்துவதுடன், வணிகத்தின் அளவையும் அதிகரிப்பதில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம்.

பால் பிஸ்கட்டுகள் ஏற்கெனவே குடும்பங்களின் அன்றாட உணவுப் பழக்கத்தில் நன்கு இடம்பெற்றுள்ளன. இன்டிபெண்டன்ஸ் பவர் அப் பிஸ்கட்டுகள் மூலம், பால், குளுக்கோஸ் மற்றும் புரதம் ஆகியவற்றை ஒரே தயாரிப்பில் இணைத்து, நுகர்வோருக்கு ஒரு தனித்துவமான தேர்வை வழங்குகிறோம்.

‘ஒவ்வொரு நுகர்வோருக்கும், ஒவ்வொரு தருணத்திற்கும்’ என்ற எங்கள் தத்துவத்தை எங்களின் விரிவான தயாரிப்பு வரிசை பிரதிபலிக்கிறது. நுகர்வோரின் பல்வேறு தேவைகளில் உள்ள வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றைப் பற்றிய புரிதலைப் பொருத்தமான தயாரிப்புகளாக மாற்றி, அதிக மதிப்பை வழங்குவதே எங்கள் நோக்கமாகும்.”

அஜித் குமார் பந்தய அணியுடன் பிராண்ட் கூட்டணி

மோட்டார் பந்தயத்தின் வேகம், செயல்திறன் மற்றும் போட்டி உணர்வுடன் இன்டிபெண்டன்ஸ் பவர் அப் தயாரிப்பின் தனித்துவமான அடையாளத்தை ஒருங்கிணைக்கும் வகையில், ரிலையன்ஸ் கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் நிறுவனம் அஜித் குமார் பந்தய அணியுடன் இணைந்து செயல்படுகிறது.

இந்தக் கூட்டணியின் மூலம் தமிழ்நாட்டில் தயாரிப்பின் தெரிவுநிலையையும் நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வையும் அதிகரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. பிஸ்கட் தயாரிப்பு வரிசையையும் சந்தையில் தனது இருப்பையும் விரிவுபடுத்தும் நிறுவனத்தின் பரந்த நோக்கத்திற்கு இந்தக் கூட்டணி ஆதரவளிக்கும்.

பல்வேறு விற்பனை வழிகள் மூலம் விநியோகம்

இந்தத் தயாரிப்புகள் வழக்கமான சில்லறை விற்பனைக் கடைகள், தேசிய மற்றும் பிராந்திய நவீன விற்பனை நிலையங்கள், இணையவழி வணிகத் தளங்கள், ரிலையன்ஸ் சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் மொத்த விற்பனை வழிகள் மூலம் நுகர்வோருக்குக் கிடைக்கும்.

இதன் மூலம் தயாரிப்புகள் பரவலாகக் கிடைப்பதை உறுதிசெய்வதுடன், அதிகமான நுகர்வோரைச் சென்றடையும் வகையில் விநியோக வலையமைப்பையும் வலுப்படுத்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.